<u>முதன்மை சார்பு நீதிமன்றம், செய்யாறு, திருவண்ணாமலை மாவட்டம்.</u>

அ.வ. எண். 277/2020

| | | |
|---|---|---|
| பிரதிவாதி தரப்பு சாட்சி | .. | 1 |
| பெயர் | .. | சுரேஷ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | .. | தண்டபாணி |
| வயது | .. | 30 |
| தொழில் | .. | |
| கிராமம் | .. | விளாரிப்பட்டு |
| வட்டம் | .. | செய்யாறு |

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 07ஆம் நாள் செவ்வாய்கிழமை திரு. நா. சுரேஷ், எம்.எல்., முதன்மை சார்பு நீதிபதி, செய்யாறு அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதி செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

வழக்கில் 4ம் பிரதிவாதி. எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் என்னால் சொல்லப்பட்டது. நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையதுதான். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். 07.02.1927 தேதிய கிரைய பத்திரத்தின் சான்று நகல் பி.த.சா.ஆ.1, 27.02.1933 தேதிய அடமான பத்திரத்தின் சான்று நகல் பி.த.சா.ஆ.2, 23.03.1953 தேதிய கிரைய பத்திரம் பி.த.சா.ஆ.3, 26.11.2001 தேதிய கிரைய பத்திரத்தின் சான்று நகல் பி.த.சா.ஆ.4, 03.04.2002 தேதிய பதிவு செய்யப்படாத கிரையபத்திரத்தின் நகல் பி.த.சா.ஆ.5, 14.09.2020 தேதிய பட்டா எண். 351ன் பட்டா நகல் பி.த.சா.ஆ.6, 07.10.2020 தேதிய பட்டா நகல் பி.த.சா.ஆ.7, 23.07.2020 தேதிய வாக்குமூலம் அசல் பி.த.சா.ஆ.8, தாவா ச.எண். 76ன் புல வரைபட நகல் பி.த.சா.ஆ.9.